2010 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இயங்கிவரக்கூடிய சுயநிதிப் பள்ளிகளுக்குக் கட்டண விகிதங்களை நீதியரசர் கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய குழு நிர்ணயித்து அது பத்திரிகைகளின் வாயிலாக அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. நான் ஓரிரு நாட்களுக்கு முன்பாக இந்த அவையிலே சொல்லும்போதுகூட, *4, 5* நாட்களிலே அது வெளியிடப்படும் என்பதைச் சொன்னேன். அதில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் தனியாகக் கட்டணங்களை நிர்ணயித்திருக்கிறார்கள். ஏறத்தாழ *10* ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கட்டணங்களை நிர்ணயித்து அந்த ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அதற்கான தாக்கீதுகளை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் பள்ளிக்கூடங்களினுடைய நிர்வாகங்களில் சில அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கூட்டமைப்பின் சார்பாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் அந்த கமிட்டிக்கே அவர்கள் அப்பீல் செய்வதற்கு வாய்ப்பும் இருக்கிறது. ஆனால் உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். நாளை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருகிறது. தமிழக அரசின் சார்பிலே அங்கே ஆஜராகி நம்முடைய கருத்துகள் உச்ச நீதிமன்றத்திலே வைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். சமச்சீர் கல்வியினைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கெனவே இந்த அவையிலே பலமுறை அறிவித்ததைப்போல், இந்த ஆண்டு, *1* முதல் *6* ஆம் வகுப்புகளில் சமச்சீர் கல்வி முறையை நாம் அமல்படுத்தவிருக்கிறோம். அதற்கு எந்தவிதமான தடையையும் High Court கொடுக்கவில்லை. எனவே, *1* முதல் *6* ஆம் வகுப்புகளில் சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவருவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. நாம் கொண்டு வருகிறோம்.

**(இ) இலங்கை அகதிகள் மலேசிய சிறையில் துன்புறுத்தப்படுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை அவையின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த 15 தினங்களுக்கு மேலாக இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த தமிழர்கள் மலேசியாவிற்குச் சென்றபோது, அந்த நாட்டினுடைய அரசாங்கம் அவர்களைக் கைது செய்து, பின்புறமாகக் கைகளைக் கட்டி, குழந்தைகளையும் கட்டி, 15 நாட்களாகச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். உணவுக்கு வழியில்லை. ஒருவர் உணவு சாப்பிட வேண்டுமென்றுசொன்னால்கூட, கையைக் கட்டிவிட்டு இன்னொருவர் சாப்பிட்டபிறகு, அவர் கைகளைக் கட்டிவிட்டு, அதற்குப்பிறகு இவர்களைச் சாப்பிடுவதற்கு அனுமதிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான சூழலில் அவர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு பத்திரிகைகள், வார இதழ்கள், ஊடகங்களின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வரவேண்டுமென்கிற அடிப்படையில் தகவலைச் செய்தியாக வெளியிட்டிருக்கின்றன. நேற்றுகூட கேரளாவில் ஒரு படகு கரை ஒதுங்கி, அவர்கள் ஓர் உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது 38 பேரை, அதில் 5 பெண்கள், 5 குழந்தைகள், கேரள அரசாங்கம் கைது செய்து, அவர்களும் இன்றைக்கு மிகப் பெரிய கொடுமைக்கு, துன்பத்திற்கு, துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து இதுபோன்று அகதிகளாக வருகின்ற நம்முடைய உறவுகளை உலக நாடுகளும், தமிழக அரசும் பல்வேறு இடங்களில் அவர்களை அகதிகளாகப் பாவித்து அவர்களுக்கான அடிப்படை உணவு மற்றும் பிற தேவைகளைச் செய்து தருகின்றன. தயவுசெய்து அங்கு சிறையில் இருக்கின்ற அவர்களை மீட்டெடுப்பதற்கு, அகதிகளாக வருகின்ற குழந்தைகள், பெண்கள், மாணவச் செல்வங்களை மீட்டு அவர்கள் விரும்புகின்ற நாடுகளுக்குப் பத்திரமாகச் சென்று தங்குவதற்கான வழிவகைகளைக் காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்கிற அளவில் இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியது போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டு இருக்காதீர்கள்.

2010 மே 10]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், உங்கள் இரண்டு பேருக்குள்ளே அங்கே என்ன பேச்சு?

**திரு. வை. சிவபுண்ணியம்:** இலங்கைத் தமிழர்கள் மலேசியா சிறையிலே வாடுவது குறித்து இங்கே திரு. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது பத்திரிகை வாயிலாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் வந்திருக்கிறது. அங்கே அவர்கள் துன்புறுத்தப்பட்டு மிகச் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்ற செய்தி வந்திருக்கிறது. அதைவிடக் கொடுமையான செய்தி என்னவென்றால், அவர்களைப் பாதுகாத்து உயிர் பிழைக்கச் செய்வதற்குரிய முயற்சியை எடுப்பதற்குப் பதிலாக இலங்கை அரசு எங்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று கோருகிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு, தமிழர்களுக்கு இப்படி ஓர் இன்னல் ஏற்பட்டிருப்பதை அறிந்து அவர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே மலேசிய சிறைகளிலே வாடிக் கொண்டிருக்கிற அந்தத் தமிழர்களை மீட்டு, தமிழகத்திலே பாதுகாப்பாக வாழச் செய்வதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், இதைத்தானே சொல்லப்போகிறீர்கள்? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மலேசியாவில் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கிற 75 தமிழர்களும், சர்வதேச நியதிகளுக்கு எதிராகவும், ஐ.நா. ஒப்பந்தங்களுக்கு எதிராகவும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அகதிகளாகத் தஞ்சம் புக வருகிற எவரையும் அவர்களுடைய நாட்டிடம் திரும்ப ஒப்படைக்கக் கூடாது, அவர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்று ஐ.நா. ஒப்பந்தங்கள் வலியுறுத்துகின்றன. சர்வதேசச் சட்டங்களும் அதைத்தான் சொல்கின்றன. அப்படி இருந்தும் இன்றைக்கு அவர்களை மிகவும் கொடூரமான முறையிலே மலேசிய அரசாங்கம் நடத்திக்கொண்டிருக்கிறது. இதிலே தமிழக அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு,

அந்தத் தமிழர்கள் தாங்கள் விரும்புகிற நாடுகளுக்குச் செல்ல உதவ வேண்டும் அல்லது தமிழ்நாட்டிலே அவர்களை அகதிகளாக வைத்துக்கொள்வதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அவ்வளவுதான்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது முதல் நூற்று நாற்பத்து எட்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எண்பத்து ஏழாவது முதல் தொண்ணூற்று மூன்றாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) இலங்கை அகதிகள் மலேசிய சிறையில் துன்புறுத்தப்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்பொழுது

2010 மே 10] [பேரவைத் தலைவர்]

சொல்லி இருக்கிறீர்கள். முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கவனத்தை ஈர்த்திருக்கிறீர்கள், இல்லையா? திரும்ப எதற்கு எழுந்திருக்கிறீர்கள்? உட்காருங்கள். மற்றதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். ஆனால், அந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று விரும்பி, கட்டாயப்படுத்துவதைப்போலக் கேட்பது எந்த வகையிலும் அவையினுடைய மரபிலே இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் approach தவறு. உட்காருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அவையினுடைய கவனத்தை நீங்கள் ஈர்த்தாகிவிட்டது. பதில் சொல்ல வேண்டியது அரசினுடைய கடமை. அதை எப்பொழுது சொல்ல வேண்டுமோ அப்போது சொல்வார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் முதலிலே உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு தவறான ஒரு தகவலை நான் தரவில்லை. நீங்கள் சொன்ன பிரச்சினைமீது அரசாங்கத்தினுடைய கவனத்தைத்தான் ஈர்த்திருக்கிறீர்கள். உடனே முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்பதற்கு எந்த வகையில் விதியில் இடம் இருக்கிறது? அப்படிக் கேட்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நேரம் வரும்போது சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** விவரம் கிடைத்தால் அதைச் சொல்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், விவரம் கிடைத்ததற்குப் பிறகு சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதை முதல்வர் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்பொழுது பதில் சொல்லவில்லை என்றால்,

அந்த விவர அறிக்கை வந்ததற்குப் பிறகு சொல்வார்கள் என்று அர்த்தம். நீங்கள் அதைக்கூட புரிந்துகொள்ளாமல் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.